மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தூத்துக்குடியில் ஆர். ஆர். ஆறுமுகசாமி நாடார் என்பவர் 17 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நிலத்தை விவசாயக் கல்லூரிக்கு வழங்குவதற்குத் தாயராக இருப்பதாக மாவட்டக் கலெக்டர் மூலமாகத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தொகை போதாத காரணத்தால்தான் இதைச் செய்ய முடியாது. 17 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள நிலம் தருகிறேன், "ஆறுமுகசாமி நாடார் கல்லூரி" என்று பெயர் வைத்தால் போதும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் கூடுதலாகக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை வந்தால் அதைப்பற்றி யோசிக்கலாம். பட்டா நிலத்தைத்தான் வாங்கிக் கொடுக்கவேண்டும் என்று அல்ல, புறம்போக்கு நிலத்தைச் சதுரமாகக் காண்பித்தால்கூட ஏற்றுக்கொள்ளலாம்.

மதுரை கூட்டுறவு பால் வழங்கும் சங்கம்.

* 533 வினா—**திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மாண்புமிகு உணவு—வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை சாத்தமங்கலம் பால் திட்டத்தோடு மதுரை கூட்டுறவு பால் யூனியனையும் நடத்தும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், யூனியனில் வேலை பார்க்கும் சிப்பந்திகளையும் பால் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளும் உத்தரவு ஏதேனும் அனுப்பியதுண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) & (இ) : மதுரை நகரில் பால் வாங்குபவர்களுக்குப் பால் வழங்குவதற்காக மதுரை பால் பாதுகாப்புப் பண்ணை ஒன்றை ஏற்படுத்தியதன் விளைவாக, மதுரை கூட்டுறவு பால் வழங்கும் சங்கம் பால் வழங்கும் பணியைக் கைவிட வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டது. இந்தச் சங்கம் சேகரிக்கும் பாலை மதுரை பால் பாதுகாப்புப் பண்ணையிடம் ஒப்படைத்துவிட வேண்டுமென்றும், பாதுகாப்பு நிலையத்திடம் ஒப்படைப்பதற்காகப் பாலை உற்பத்தி செய்வதையும் சேகரிப்பதையுமே இது மேற்கொள்ள வேண்டும் என்றும் அரசாங்கம் ஆணையிட்டது. அதற்கிணங்கக் கூட்டுறவுச் சங்கம் பால் வழங்கும் பணியைக் கைவிட்டது. இதற்கெனச் சங்கம் நியமித்திருந்த பணியாளர்களை ஆட்குறைப்புச் செய்ய வேண்டியதாயிற்று. சங்கம் ஆட்குறைப்புச் செய்த 54 பணியாளர்களில் 46 பேர் மதுரை பால்பண்ணையிலேயே வேலைக்கு வைத்துக் கொள்ளப்பட்டனர். சங்கத்தின் எழுத்தர் பணியாளர்களாகிய எட்டுப் பேருக்கும் மதுரை பால் பண்ணையில் வேலைக்கு எடுத்துக் கொள்வதற்குத் தேவையான தகுதியிராததால், அவர்களைப் பணியிலமர்த்திக் கொள்ளவில்லை.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : சாத்தமங்கலம் பால் திட்டத்தோடு மதுரை கூட்டுறவுப் பால் பண்ணை இணைக்கப்பட்ட பிறகு வேலையிலிருந்து நீக்கப்பட்ட எட்டுப் பேர்களுக்கும்—அவர்கள் வேலை இல்லாது மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதால்—மீண்டும் பரிசீலனைசெய்து சாத்தமங்கலம் பால் திட்டத்திலேயே ஏதேனும் வேலை கொடுத்துப் பாதுகாக்க அரசு முன்வருமா எனக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : வேலையிலிருந்து நீக்கப்பட்ட எட்டுப் பேர்களும், போதுமான தகுதி (குவாலிஃபிகேஷன்) இல்லாத காரணத்தினால் தான் நீக்கப்பட்டார்கள். அவர்களுடைய படிப்புக்குத் தகுந்த வேலை வேண்டுமென்றால் அரசாங்கம் யோசிக்கும்.

Town Planning Officers.

* 534 *Q.*—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state the stage at which the proposal of provincialisation of the services of Municipal Town Planning Officers stands ?